# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் ௳ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௫] யாழ்ப்பாணம்:- கர வருஷ பங்குனி மீ ௨௯உ வெள்ளிக்கிழமை (11 April 1952) [இல - ௪]


உ

## பொன்னம் பலத்தாடும் தலைவா!

திருச்சிற்றம்பலம்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமம்
தரிப்பார் பொன்னம் பலத்தாடும் தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி யினித்தான் நல்காயே.

திருச்சிற்றம்பலம்

அரசியல் அலை

# அபேட்சகர்களுக்குத் தூண்டில்!

## ஏமாற்றுப்பேச்சும் இரகசியச்சூழ்ச்சியும்

### தேர்தலிற் கையாளப்படும் சம்பிரதாயங்கள்

கட்சிகளுண்டு; அபேட்சகர்களில்லை. இது ஒரு கவலை (ஆனல்) அபேட்சகர்கள் இருக்கிறார்கள்; அங்கீகரிக்கப்படத் தக்கவர்களைக் காணோம்! இது ஒரு சங்கடம்.

இந்த நிலைமையில் கட்சிகளுக்குத் துணை சூழ்ச்சிகளே! கட்சிகட்கு எல்லாம தீவிர கொள்கையுடையன இடதுசாரிக் கட்சிகள் அவை தாம் ஆரம்பத்தில் ஒரே வித்தில் அங்குரித்தும் கொள்கைநுணுக்கத்தினற் பல தரப்பட்டவை. இந்தத் தீவிரக் கொள்கைக் கட்சிகள் அக்கட்சியில் எக்காலத்தும் அங்கத்தவர்களாய் இல்லாதவராய் அன்றி அக்கட்சியில் நின்று உழைக்காதவர்களைத் தங்கள்கட்சி அபேட்சகர்களாகத் தூண்டில் போடுகின்றன.

வீழ்த்தும் முன்னணி ஒன்று உபயங் கேட்டு நிற்கின்றது இடதுசாரிக் கட்சிக்கு அபயம் கூறுகின்றது.

ஐக்கிய முன்னணி என்று ஒரு நவ அமைப்பு. அது இரண்டு வகை: 'வெளிமுக ஐக்கியம்' 'மறைமுக ஐக்கியம்' கட்சிக் கொள்கை ஒன்று; மாற்றானை மடக்குவதென்றுற் கொள்கை கொள்ளை போனுலென்ன.

பண்டாரநாயகக் கட்சி சேனநாயகக்கட்சியை வீழ்த்த அதன் கொள்கையை விட்டு, அதன் கொள்கைக்கும் முற்றும் மாறுன எக்கட்சியுடனும் சேர்ந்து போராட ஆயத்தம். இதுபோன்று சேனநாயகக் கட்சியும்?

இவ்வாறு உப்புப் புளி உவப்பில்லாக் கொள்கைக் கூட்டக் கள்ள நட்பு எல்லாக் கட்சியினரிடமும இருக்கின்றமைதான் இத் தேர்தலில் அற்புத அம்சம்.

# கர வருடம் கழிகின்றது

## நந்தன ஆண்டுநகர ஆரம்பிக்கின்றது

கர வருடம் கரவாது வேண்டியவற்றைத் தந்தது. அது சனிக்கிழமை வரையும் நின்று கழிகின்றது. நந்தன ஆண்டு ஞாயிற்றுக்கிழமை (13-4-52) பிறக்கின்றது. புத்தாண்டுப் பலன் பார்க்கும் பொழுது சோதிட நூற் செய்யுள் துன்பத்தைக்குறிக்கின்றது. ஆனல் ஆண்டின் சாதகத்தின்படி இன்பமும் துன்பமுங் கலந்த பலனைப் பஞ்சாங்ககாரர் காண்பிக்கின்றனர். இருவினை இன்பத் துன்பங்களை யுடையதே இவ்வுலக வாழ்வு. ஆகவே, இறைவன் திருவருள வழி நின்று எதற்கும் சமமதமாய் வருவது எதையும் அஞ்சாது எதிர் பார்ப்போம்.

இவ்வாறு எதிர் பார்த்து நிற்கும்பொழுது எம் உள்ளங்களிற் கொள்ளவேண்டிய உண்மைகள் சில உண்டு. அவற்றை ஒருவாறு அறிய முயல்வோம்.

### காலச் சக்கரச் சுழற்சி

ஆண்டு மாசங்களை யுடையது. மாசங்கள் வாரங்களை யுடையன. வாரங்கள் நாட்களை யுடையன. நாட்கள் நாடி, விநாடி முதலிய சிறு பிரிவுகளை யுடையன. இவை எல்லாம் இவ்வுலக வாழ்வின் ஆயுட் காலத்தை அளப்பன. ஆயுட் காலம் என்பது ஆன்மாக்களாகிய நாங்கள் எம் இல்லங்களாகிய இத் தூல தேகங்களிலே — அன்னமய கோசங்களிலே — பொருந்தி வாழும் காலத்தைக் குறிக்கும். பூரண ஆயுட்காலம் 120 ஆண்டுகளாகக் கருதப்பட்டுவந்தது. அது அருகி அருகி வந்து அறுபது ஆண்டுகளே பூரண ஆயுட்காலமெனத் திருத்தப் பட வேண்டிய நிலைமையை நாம் இப்போ எய்தியிருக்கிறோம். இவ்வாறு குறுகிய ஆயுட் காலத்திலே ஒவ்வொருவருக்கும் எத்தனை ஆண்டுகள் கழிந்துவிட்டன வென்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டும். நாழிகைகளாய், நாட்களாய், வாரங்களாய், மாசங்களாய், ஆண்டுகளாய், வாழ்நாள் எம்மை அறியாமலே கழிகின்றது. எனவே இவ்வுடலின் கண்ணே, இவ்வுலகின் கண்ணே நாம் இருந்து வாழுநாள், குறைந்து வரவே இவ்வுலக வாழ்வை விட்டு நீக்கும் நாள் எம்மை அறியாது

### நச்சுப் பாத்திரங்கள்

நச்சுத்தன்மையுடைய லோகங் கலந்த பலவித பாத்திரங்கள் சிறந்த "அலுமீனிய"ப் பாத்திரங்கள் போன்ற தோற்றத்துடன் நாட்டின் பல இடங்களிற் பரவியிருக்கின்றனவாம். இவற்றுல் பல அபாயங்களுண்டாகின்றனவென்று அறியவருகிறது. இது ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது.

அண்மையில் நெருங்கி நெருங்கி வருகின்றது. இதை நாங்கள் நினைப்பதேயில்லை. இதை நாம் நினைந்து வாழவேண்டுமென்பதை எமக்கு அறிவுறுத்தவே "நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும் — வாளது உணர்வார்ப் பெறின்" என்று எம் தெய்வப் புலவர் திருவாய் மலர்ந்தார். இந்த நினைவு எம் உள்ளங்களில் முதலாம் இடம் பெறவேண்டும்.

#### நாளை நாளை என்னுது பணி செய்க

இத்தகைய குறுகிய வாழ்நாளிலே, "இன்றிருந்தாரை நாளைக்கிருப்பரென்றெண்ணவோ திடமில்லையே" என்றபடி நிலையில்லாத இவ்வாழ்க்கையிலே நாம செயற்பாலது இதுவெனத் தெளிவாயறிந்து செய்ய முயல வேண்டியது இரண்டாவதாய் உடனே இடம் பெற வேண்டும்.

மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் துன்பத்தைத்தொலைத்து இன்பத்ததையே பெற முயலுகின்றோம். எம்மீதுகொண்ட பெருங் கருணையினுலே இம்

தொடர்ச்சி 3ம் பக்கம்

திருத்தொண்டர் திருநாள்

# "பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை" வேண்டிய அம்மை

## இல்லறம் செய்து இறையடி அடைந்த அடியார்

சோழ மண்டலத்திலே காரைக்காலிலே வைசியர் குலம் விளங்குமாறு தனதத்தன் என்னும் வைசியருக்குப் புனிதவதியார் புத்திரியாயவதரித்தார். அவர் பாம்பையணிந்த பரமன் திருவடிகளுக்கு அன்பு பூண்டொழுகும் வாழ்க்கைப் பண்பைப் பழகி வளருங் காலத்திலே, பருவம் வந்தெய்துதலும் நாகபட்டணத்திலே இசைபெற்று வாழும் நிதிபதி என்பவரது புத்திரன் பரமதத்தனுக்கு அவரை முறைப்படி மணம் புரிவித்தார்கள்.

அரனர் திருவடிகள்மீது அன்பு பெருகி வளரும் பேற்றையுடைய அம்மையார் மனை அறத்தையும் மாண்பு பெற நடத்தி வந்தார்

"ஆங்கவன் தன் இல்வாழ்க்கை
அருந்துணையாய் அமர்கின்ற
பூங்குழலார் அவர் தாமும்
பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியஅன் புறுகாதல்
ஒழிவின்றி மிகப்பெருகப்
பாங்கில்வரும் மனை அறத்தின்
பண்புவழா மையில்பயில்வார்."

சிவனடியார் வரும்பொழுது அவர்களுக்குத் திருவமுது திரவியம் முதலியன கொடுத்துச் சிவபிரான் திருவடிகளிலே பெருகுங் காதலையுடையராயினர். இவ்வாறு நிகழும் நாட்களிலே [illegible] காரியத்தொடர்பில் [illegible] இரு மாங் கனிகளைக் கொடுக்கப் பரமதத்தன் அவற்றை இல்லாளிடத்துக்கு அனுப்பினன். பசியால் வருந்தும் அடியாரொருவர் இல்லுட் புகுந்தார், கறி சமைக்கப் படவில்லை. அம்மையார் மாங்கனிகளில் ஒன்றை யெடுத்து அடியாருக்குத் திருவமுதுடன் படைத்தார். அடியார் அதை உண்டு அம்மையார் செயலைப் புகழ்ந்து அகன்றார்.

### மாங்கனி மறைந்த மாயம்!

பரமதத்தன் பகற்பொழுது உணவருந்த வீட்டுக்கு வந்தான். அம்மையார் முறைப்படி உணவூட்டினர். இருந்த மாங் கனியையுங் கலத்திலிட்டனர். அக் கனியை உண்டு அதன் சுவை மிகுதியால் மற்றதையுங் கொண்டு வரும்படி கூறினன். அம்மையார் சிவபிரான் திருவடிகளை வணங்குதலும் பழமொன்று கைக்கு வந்தது. அதை யுண்டபொழுது அது அமுதினுமினியதாய் முன்னையதினும மிகுந்த சுவை யுடையதா யிருந்தது. இது எங்கே பெற்றது என்று அம்மையாரைக் கேட்டான். அம்மையார் நடந்ததை நடந்தபடி கூறினர். அப்படியானல் இன்னுமொரு கனி பெற்று வருவாயாக [illegible] அவன் கையிற் கொடுத்தவுடன்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மனித ஒழுக்கத்திற்காக

# மதுபானம் ஒழிதல் வேண்டும்

## சமூகத் தொண்டிற் சிறந்த அம்சம்

மதுபானம் செய்யாதவர்களுக்கு மதுவிலக்குப் பிரசாரம் செய்வதிற் பிரயோசன மில்லை. மது அருந்துவோர் மத்தியில் சென்று ஒலிபரப்பி முதலிய சாதனங்களின் துணைகொண்டு கள் சாராயம் உட்கொள்ளும தீய பழக்கத்தை அவர்கள் தாமாகவே விடக்கூடிய சக்தி வாய்ந்த பிரசாரத்தைச் செய்தல் மிகவும் வேண்டப்படுவதென்று அபிப்பிராயந்தந்தார், மதுவிலக்கு மகாசபை உப தலைவர். திரு M. M அப்துல்காதர் அவர்கள கொட்டடியில் நடந்த ஒரு பிரசாரக் கூட்டத்திற பேசினர்.

தொடர்ந்து பேசுகையில் வைத்திய நிபுணர்களதும ஆராய்ச்சியாளர்களின் அநுபவமும் மது பெருந் தீமை விளைவிப்பதென்று திட்டவட்டமாக வற்புறுத்துகிற தென்று ஆங்கிலேய பத்திரிகை விமர்சனத்தை எடுத்துக் காட்டினர் திரு அப்துல்காதர்.

தலைமை வகித்த Dr. C. குருசாமி அவர்கள் மகாசபையின் நோக்கங்களை எடுத்துச் சொன்னர். பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. மு. ஞானப்பிரகாசம B. A., B. Sc. அவர்கள சமயாசாரத்திற்கு மது பொருந்தாதென்றும, மாணவர்கள் இத்தீய பழக்கத்தைப் பழகாமற் றடுப்பதற்கு ஆசிரியர்கள் முனைவரவேண்டுமென்றும் மதுவிலக்கு இயக்கம் பெரிதும் விரும்பப்படக் கூடிய சேவா சங்கமென்றும் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் R. N. சிவப்பிரகாசம, வடிவேற்சாமி, ச. அம்பிகைபாகன் ஆகியோர் குறிப்புரை பகர்ந்தனர்.

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கர ஹு பங்குனி மூ உகவ வெள்ளிக்கிழமை


## நந்தன! - - நின்வரவு நன்றுருக!!

நாழிகையும், நாளும், திங்களும், ஆண்டும் வருவதும் செல்வதுமாகக் காலச் சக்கரம் இறைவன் இன்னருளால் இனிது நடைபெற்றுக்கொண்டே வருகின்றது. ஓராண்டு கழிந்து பிறிதோராண்டு புகுகின்ற இவ் வமையம் சென்றது போக வருகின்றது நன்றதாக என்றே நாம் இயல்பாக எண்ணுகின்றோம்.

இது நல்ல உலகம். எல்லாம் இறைவன் மயம். ஒரு பொல்லாப்பும் இல்லை என்று காரியம் அறிந்தவர்கள் உணர்ந்துகொண்டு வேலையை வேலைக்காகச் செய்து இறை பணியில் நிற்பர். மெய்யறி வில்லாதவர் நன்மையும் அஃதின்மையும் கண்டு ஒருகால் உவகையும் ஒருகால் உள்ளத்தழிவும் ஆக அல்லற்படுவர்.

கர ஆண்டு கண்ணியம் அற்றது; நந்தன - நல்லது என்று சொல்வதை, கோட்களை ஆராயும் வானகணித நூல் வல்லுனர் பால் விட்டு, எந்தஆண்டும் இயல்பாக எவ்வாற்றாயினும் ஆகட்டும், மக்கள் ஆன்றோர் கூறிய அறநெறிப்படியே ஒழுகி வருவார்களாக என்று மனக் கட்டுப்பாடு செய்தலே நன்று.

'ஞாயிறு திங்கள் செவ்வாய், புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே' என்று ஞானத்தின் திருவுருவாகிய திருஞானசம்பந்தப்பெருமான் திருவாய் மலர்ந்தபடி இறைவன் பணியில் நிற்கின்றவர்களுக் கெல்லாம் வியாழன் பகைக்கி லென்? சனி ஒறுக்கி லென்? இரவி இடர் விளைக்கிலென்? மதி மறுக்கி லென்? குறைவராது என்பது என்றுமுள்ள அழியா உண்மை!

ஆகவே இறைபணியில் எம்மனோர் அனைவரும் நிற்றல் வேண்டும் என்பது போதருகின்றது. வான் முகில் வழாது பெய்து மலிவளஞ் சுரப்பதை எதிர்நோக்கின் நாடெங்கும் கற்புடை மங்கையர் விளங்குதல் வேண்டும்.

### எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாச யந்திரசாலையில் கடமை ஆற்றுவோர்க்கு 12—4—52 உ தொடக்கம் 18—4—52 உ முடிய புதுவருடப்பிறப்பின்பொருட்டு விடுமுறை நாட்களாகையால் இந்நாட்களில் இவ் வியந்திரசாலையில் எவ்வித கருமமும் நடைபெறாது.

15-4-52, 18-4-52 ஆகிய நாட்களில் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா. — அதிபர்.

கோன் முறை அரசு நடப்பதை எதிர் பார்க்கின் "ஈன்றாள் பசி காண்பானாயினுஞ் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை" என்ற பெருங் குணம் வாய்ந்த நல் அமைச்சர் தேசத்திலே திகழ்தல் வேண்டும். குறைவிலா துயிர்கள் வாழ்வதை எண்ணுகில் உழுதுாண் விரும்புதலும் நிரம்பிய நூலறிதலும் அறிந்தவற்றிற்குத் தக நடப்பதும் வேண்டும். இவையினும் மேலாக நினைப்பவர் தம் மனம் கோயில் கொண்டருளும் அனைத்துயிராகும் அரன் நாமமே வழுக்கி வீழினும் மறவாச் சிந்தையுடையராதல்வேண்டும். 'மண்ணில் நல்ல வண்ணம்' வாழ்வதற்கு இதுவே வழி. இந் நெறி நின்றால் நந்தன ஆண்டும் நல்லது தான். இனி வரும் ஒவ்வோராண்டும் உத்தமமாய் அமையும்.

புத்தாண்டிலே பொதுத் தேர்தலும் புதுப் பாராளு மன்றமும் அமைக்கப்பட வேண்டிய பெருங் கடமை இலங்கை வாழ் மகாசனங்களில் இருக்கின்றது. நந்தன ஆண்டு தனி சிறப்பாகவும் நன்மை பயக்கக்கூடியதாக்கவும் இருக்க வேண்டுமேயானால் ஆரம்பத்திலேயே தேசப்பணியை ஒருபாற்கோடாத உண்மைவழியில் நாட்டின்நலன் கருதி ஒற்றுமை வாழ்வை நோக்கி வாக்காளர்கள் ஆற்றுவார்களாக.

இப்பொழுது சென்று தேய்ந்து இறுதியாகும் கர ஆண்டில் நல்லொழுக்கம்எவ்வகையில் ஒழுகினோம் தீய முறைகள் யாவற்றைக் கையாண்டோம் என்று ஆராய்ந்து விலக்கவேண்டியவற்றை வர விருக்கும் புத்தாண்டில் ஒழித்து நல்லனவற்றைத் தொடர்ந்து செய்துவர ஒவ்வொருவரும் தீர்மானஞ் செய்து கொள்ளுதல் வேண்டும்.

தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிறத்துவேஷச் சட்டங்களை எதிர்த்து ஆபிரிக்கர், இந்தியர், ஏனைய வெள்ளையரல்லாதார் யாவரும் அவர்களுடன் ஒரு சில வெள்ளையரும் ஒன்று சேர்ந்து சத்தியக்கிரக இயக்கம் தொடங்குவதற்குச் சத்தியம் செய்து அது சித்தியெய்துவதற்கு அருட்டுணை வேண்டி 6-4-52-ல் யாவரும் திரண்டு கடவுளைப் பிரார்த்தித்தனர்.

தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானு?

இறை ஒளி

17

**ஆச்சிமாரே, ஆசிரியரே!**

நான் பாக்கியசாலி. இறைவன் கருணாமூர்த்தி, அவரவருக்கு வேண்டியதை அநுக்கிரகித்துக் கொண்டே இருக்கிறான். கல்வி கற்றுவிட்டேன் என்று மமதை உள்ள எனக்கு அந்த ஆணவத் தோற்றத்தை அகற்ற அருள் புரிகிறார். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதை மறந்த எனக்கு அப்பெரும் மந்திரத்தை ஞாபகப்படுத்தியிருக்கின்றார். அன்னையென்பாள் உலகன்னையின் ஓர் உருவம் என்றதை அறியாத எனக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்

ஆசிரியரே கல்விக்கரை கண்டுவிட்டோம் என்று எம்மை மறந்தோம். எங்களை அறியாமல் எண்ணங்கள் கொண்டோம், உறுதிமொழி உரைத்தோம். ஆனால் இறைவன் பரமதயாளன் வழி தவறுவோரை நெறியில் நிறுத்துபவன். விடுவானு, இன்பத்தின நிலை ஏதேதோ என்று எண்ணிய எங்களுக்கு இதுதான் என்று காட்டிவிட்டார்.

ஆசிரியரே, நானோ கன்னிப் பெண், தாய் தந்தையரை அறியாமல் கற்புக்கும் கடமைக்கும் ஒரே முறையிற் சமாதானம் செய்ய இயலாதவளாய் இவ்வுலக வாழ்வைவிட எண்ணினேன், எல்லாம் என்னால் இயலும் என்று இறுமாந்தவளாகையால் நகர்ப்புறத்திலுள்ள தந்தையாரின் இல்லத்திலிருந்து புறப்பட்டு வீறுகொண்டெழுந்த ஆறு ஆறுதல் செய்யும் என்றெண்ணி அதன்பாற் குதித்தேன். இப்போது இங்கு நிற்கின்றேன். இறைவன் இருக்கின்றான் என்று நான் உண்மையாய் அறியும்படி அரன் அருள் புரிந்திருக்கின்றான்.

ஆசிரியரே கன்னிப் பெண் இருக்கும் இடத்தில் வாலிப வயதுள்ள நீங்கள் இருப்பது முறையன்று. தாய் தந்தையரையே முன்னறிந்தவன், யான் அவர்களை அடைந்த பின்னரே நான் உங்களுடன் எங்கள் எதிர்காலம் எவ்வாறமைய வேண்டும் என்று ஆராய முடியும். நான முன் சொன்ன சொற்றவறாது என் அப்பாவுக்கு நான் கொடுத்த வாக்கும் தவறாது.

**நயம் பெறும் சுயம்வரம்**

தமிழ்மகளிர் குலத்துக்கு ஒரு கொம்பர் ஆகவே நான் திகழ வேண்டும். நெறிதவறு முறை எது என்பதை முன் பல மங்கையர் திலகங்கள் காட்டிவிட்டனர். நானும் நாட்டியே வைப்பேன்— 'தென்றமிழ்ப் பாவைசெய்தவக் கொழுந்து ஒரு மாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணியாய் பத்தினி கண்ணகி அவள் மரபு எங்கள் மரபு — நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்' என்றாங்கு இம் முதுகுரவர் எமக்கும் இறைவனின் பிரதிநிதிகளாக வந்திருக்கின்றனர் பெற்றார்க்காற்றும் பெருங் கடமை செய்தே பின் உற்றார்க் காற்றவேண்டியது முறை.

'தந்தைமகற்காற்றும்
நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்'

என்பதறிந்த தந்தை என்னை அவையின் முந்தியிருப்பச் செய்ய முயன்ற காலை புறக்கண் புலனால் உங்களைக் கண்டு தந்தையை மறந்தேன். மறந்ததை யின்றுணர்ந்தேன்.

ஆசிரியரே! மறுவில் கற்பின் மனையாள்போல மனைத்தக்க மாண் புடையளாக நான் இருக்க வேண்டுமேயானால் யான் அன்னை தந்தையரை வணங்கியே தீரவேண்டும்!!

அறிவிற் சிறந்த ஆசிரியரே, பராசக்தி திருவருள் உண்டு. சென்று வாருங்கள். அன்னை!! தந்தையரை யான் அடைந்தபின் 'நீங்கள் என்னை அடையலாம்! சுயம்வரம் என்பது தமிழ்ப் பண்பு. ஆனால் பெற்றார் ஆசி பெற்ற சுயம்வரமே நயம்பெறும். சென்றுவாருங்கள்.

ஓம்சக்தி! ஓம்சக்தி! ஓம்சக்தி ஓம்! பராசக்தி பராசக்தி ...... என்று மடத்திலுள்ள ஆச்சியர் பிரார்த்தித்தனர்.

ஆசிரியர் குமரன் புடம்போட்ட பொன் போல உணர்ச்சி வேகத்தின் அதிர்ச்சி நீங்கினவராய்ப் பங்கஜத்தின் தாய்தந்தையரைத் தேடி வருவது தன்கடமை என்று நன்குணர்ந்து விடை பெற்றுச் சென்றனர்,............ (வளரும்)

# பாராளு மன்றத் தேர்தல்

## வடகீழ் மாகாணத் தொகுதிகளுக்கு அபேட்சகர்கள்

**யாழ்ப்பாணம்**

திரு. G. G. பொன்னம்பலம் — த. கா.
,, K. வைகுந்தவாசன் — ச. அ.
,, Dr. E. M. V. நாகநாதன் — த அ
,, அ. விசுவநாதன் — ச. ச.

**காங்கேசன்துறை**

திரு. S. J. V. செல்வநாயகம் — த அ
,, S. நடேசன் — ஐ தே

**கோப்பாய்**

திரு. C. வன்னியசிங்கம் — த அ
,, C. அருளம்பலம் — த கா
,, R. R. தருமரத்தினம் — ச ச

**பருத்தித்துறை**

திரு. T. இராமலிங்கம் — த கா
,, K. C. நடராசா சுயேச்சை
,, C பாலசிங்கம் — ச ச

**வட்டுக்கோட்டை**

திரு. K. கனகரத்தினம் — த கா
,, A. அமிர்தலிங்கம் — த அ

**ஊர்காவற்றுறை**

திரு. A. L. தம்பிஐயா — த கா
,, A. தியாகராசா — ச அ
,, V. நவரத்தினம் — த அ

**சாவகச்சேரி**

திரு. V. குமாரசாமி — த கா
,, N. அருணாசலம் — த அ

**வவுனியா**

திரு. C. சுந்தரலிங்கம் சுயேச்சை

**மன்னார்**

திரு. C. சிற்றம்பலம் சுயேச்சை

**திருக்கோணமலை**

திரு. S சிவபாலன் — ஐ தே
,, N. R. இராசவரோதயர் — த அ

ஏனையவை இவ்வாறு வெளியிடக்கூடியதாய் இன்னும் அறியவில்லை.

### மோட்டார் விபத்து

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த மோட்டார் இரதம் கண்டி வீதியில் 118 ம் மைலில் பாதையினின்றும் விலகி ஒரு மரத்துடன் மோதியதால் இரதத்தைச் செலுத்தி வந்த திரு. ஆ. சிற்றம்பலம் அவர்கள் படுகாயமடைந்து மரணமானார்.

இவர் வித்தியாபகுதியிற் பரீட்சைகளின் மேற்பார்வையாளராகக் கடமை பார்த்து வந்தனர். —

# அணிந்துரை அரங்கம்

**"நித்ய பூஜா லக்ஷண ஸங்கிரஹ."**

எனப் பெரிய தருமபுர ஆதீன 260 - ம் வெளியீடு சிவபூசைக்கு முக்கியமான காலம், திரவியம், நியமனம் முதலியவற்றை ஆகம விதிப்படி சுருக்கிக் கூறுவது. ஆன்மார்த்த பரார்த்த பூசைகள் இரண்டுக்கும் பெரும் உதவிபுரியும் தன்மையது.

தொகுத்தவர் :
சிவாகம வித்துவான்
சிவஶ்ரீ S. சுவாமிநாதசிவாசாரியர்
தருமபுர ஆதீனம்.
விலை : 1—8—0.

**இலங்கைப் புலவர்கள்**

இது "ஆறுமுக நாவலர்" "சி. வை. தாமோதரம் பிள்ளை" "கனகசபைப் பிள்ளை" ஆகும் மூப்பெரும் யாழ்ப்பாணக் கலைஞர்களைப்பற்றி முறையே திருவாளர்கள் டி. பி. மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை, ஆர். பி. சேதுப்பிள்ளை, எ. எம். பரமசிவானந்தம் ஆகிய பேராசிரியர்களால் இந்திய வானொலி நிலையத்தில் நிகழ்த்திய பேச்சுக்களைத் தன்னகத்தேகொண்டது. இந்த ஈழப் பெரியோர்களின் சரித்திரங்களை இனியஉரை நடையிற்றருவது.

கிடைக்குமிடம் :
ஒற்றுமை நிலையம்
8 வியாசராவ் தெரு,
தியாகராயநகர், மதராஸ்,
விலை அணு 8.

**"சோலை"**

குவாலாலம்பூரில், 41-ம் "இலக்கம் ஜாலன் ஹஜிசப்லெ சென்துல்", என்னுமிடத்தில் சோலைப் பிரசுர நிலையத்தாருக்காக ஆசிரியர் திரு. K. இராமநாதன் B. A., B. L., அவர்களால் தொகுத்துப் பரிசோதித்து மாசந்தோறும் வெளியிடப்பெறும் ஒரு புதுப் பத்திரிகை. இது தமிழ்மொழி வளர்ச்சி அரசியலறிவு, ஆன்ம அறிவுப்பெருக்கம் ஆகியவற்றுக்கு வேண்டிய அறிவுரைகளைத் தந்து சோலையாகவே விளங்குகின்றது.

**"மாணவன்"**

யாழ்ப்பாணம் பாலர் கழகம் தரும் புது வெளியீடு, இது பெரியோர் அறிவுரையுடன் அன்பு மொழிகூறி அன்பையும் அறிவையும் வளர்க்குந்தன்மையதாயிருக்கின்றது. இன்றைய மகன் நாளைக்குத் தந்தையாதல்போல இன்றைய மாணவன் நாளைக்கு ஆசிரியனாவான். எனவே ஆன்றோர் அறநெறி வழுவாது என்ஞான்றும் கூர்த்த மதியுடன் மாணவன் தொண்டாற்றுமென்று எதிர்பார்க்கின்றோம்.

எமது பார்வைக்கனுப்பிய பிரதிகள் அன்புடன் ஏற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு
(1) கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி வழக்காளி
இல. 5623. எதிராக
வட்டுக்கோட்டை மேற்கு
தற்போது கொழும்பு
(1) தம்பிப்பிள்ளை பூலோகசுந்தரம், எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 5623 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1,2 துண்டுக்காணி 1952ஆ சித்திரைமீ 26உ சனிக்கிழமை பிற்பகல் 4, 4½ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 2206-ம் இலக்கப் பிரிவிடுதல் வழக்கில் சொல்லப்பட்ட 1949-ம் ஆண்டு பங்குனி மாசம் 28-ந் திகதி குறித்த கோட்டுத் தீர்வையின்படியும் 112 A இலக்கப் பிளானில் 2, 5, 8 பிரிவாகச் சொல்லப்பட்டதுமான காணி சில்லாலை இறை சுண்ணாம்புகட்ட வயலும் கட்டவயலும் கெற் பரப்பு 56 குளி 05.6 வான்பயிர் செய்பயிர்களும் கிணறுகளில் பங்கும். எல்லை கிழக்கு குறித்த பிளானில் சொல்லப்பட்ட 1 துண்டும் 8 துண்டும் முடிக்குரிய நிலமும், வடக்கு குறித்த பிளானில் சொல்லப்பட்ட 3-ம் 8-ம் துண்டுக் காணிகள் மேற்கு வயிரமுத்து செல்லத்துரைக்கும் பங்காளருக்கும் குறித்த பிளானில் சொல்லப்பட்ட 6-ம் 9-ம் துண்டுக் காணிகளும் தெற்கு சின்னக்குட்டி சின்னப்புவுக்கும் பங்காளருக்கும் குறித்த பிளானில் சொல்லப்பட்ட 4-ம், 3-ம் துண்டுக் காணிகளும், இதடங்கலில் சொரியலாய் அரைவாசி விற்கப்படும்.

2. மேற்படி சில்லாலை இறை சுண்ணாம்புகட்ட வயல் நிலப் பரப்பு 40 எல்லை கிழக்கு சுளிபுரம் ஊர் எல்லையும் வாய்க்காலும் வடக்கும் மேற்கும் குறித்த எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், தெற்கு குறித்த எதிராளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்களும் ஒழுங்கையும், இதடங்கலில் சொரியலாய் ½ பங்கு விற்கப்படும்.

ந ஆறுமுகம்
கொமிசனர்

சித்தங்கேணி
26—3—1952.
M. 8 11—4—52.

## தேவை

நெசவுத்தொழில் ஆசிரியர் வியாவிற் சைவ வித்தியாசாலையில் நெசவுத் தொழில் கற்பிப்பதற்குத் தேவை.

இ. நாகலிங்கம்
மனேஜர்

சாவகச்சேரி,
5—4—52.
M. 3 8, 11 22—4—52.

## கரவருடம் கழிகின்றது

1-ம் பக்கத் தொடர்ச்சி

முயற்சி சித்தியெய்துதற்கு நிச்சயமான வழிகாட்டுவோராய் "வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை யில" என்று உறுதிமொழி கூறுகின்றார் பொய்யாமொழியார். "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம்வாக்காயம், ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காகவன்றோ" என்று தெய்வத்திருநாவரசு சிவஞானசித்தி செப்புவதும் இங்கே உற்று நோக்கத்தக்கது. இன்பத்துக்கு வழி இதுவெனவே இதை எய்துவது எவ்வாறென நாம் காணவேண்டும்.

இதை எய்தும் வழி அறநெறியொழுக்கமேயாம். இதனாலன்றோ "அறத்தான் வருவதே இன்பமற்றெல்லாம் புறத்த புகழுமில" என்று தமிழ்மறை அறுதியிட்டுக் கூறியது. அறநெறியொழுக்கத்துக்கு அடியெடுக்க விரும்புவோர், கொலை, பொய், களவு, கள், காமம் என்கின்ற பஞ்சமா பாதகங்களையும் முதலாவதாகத் தவிர்க்க வேண்டும். இவற்றைத் தவிர்த்தாலன்றி அறிவொளியோடு இன்பம் பெறுதல் முடவன் பெற்ற கொம்புத் தேனேயாம். பஞ்சமா பாதகங்களைத் தவிர்ப்பதோடு சத்தியம் அன்பு ஆகியவற்றை வளர்த்தல் சாலச் சிறந்தது. தவந்தானம் ஆகியவற்றிலும் சத்தியமே சாலச் சிறந்தது என்பதை அறிவுறுத்துமாறெழுந்த "மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை" என்னுந் திருக்குறள் இங்கே உற்று நோக்கத்தக்கது. 'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவ தாருமறிகிலார்" என்னுந் திருமந்திரம் அன்பே சிவத்தை—இன்பத்தை—த் தருவது என்பதைக் காண்பிக்கின்றது.

எனவே எமக்கு முன்வரும் புத்தாண்டிலே, பஞ்சமா பாதகங்களையும் அகற்றி, அன்பையும் சத்தியத்தையும் ஆக்கி, அரனடிமீது அன்புடையராகி, அன்பர்கள் யாவரும் இன்புற்று வாழ்வார்களாக.

[மக்கள் மதியை மழுங்கச் செய்யும் பொதுத்தேர்தல் எம்முன் வருகின்றது. அந்த நேரத்திலும் இந்த உண்மைகளையே அன்பர்கள் கடைப்பிடிப்பார்களாக. வேண்டிய வாறு நாமும் கூறுவோம்.]

## 70-வது வருடக் கொண்டாட்டம்

இந்தியாவில் 32 வருட காலம் தமிழ்ப்பணியாற்றி இப்பொழுது இங்கு வந்திருக்கும் உடுவில் தமிழ்ப் பண்டிதர் பிரமஸ்ரீ. வ மு. சரத்தினேசுவரஐயர் அவர்களின் எழுபதாவது வயசின் தொடக்கம் 23-4-52-ல் வருவதால் அன்று தினம் பி. ப. 4 மணிக்கு ஒரு உபசாரணைக் கூட்டம் உடுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடத்த நிச்சயித்துள்ளோம். அன்பர்களின் ஆசியை எதிர்பார்க்கின்றோம்.

இ. நடராஜன்
காரியதரிசி
ஷை உபசாரணைச் சபை

உடுவில்
8—4—52.
M. 7 11—4—52.

## உடுவில் கிராமச்சங்க வேலைகளுக்குக் கேள்விப்பத்திரம்

கீழ் இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 1952-ம் ஆ சித்திரைமீ 25உ வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி வரைக்கும், கீழ் சொல்லப்படும் வேலைகளுக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் தபாற்கந்தோர்மூலம் றிஜிஸ்டர் செய்து அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரம் அனுப்பும் உறையின் இடப்பக்க மூலையில் என்ன வேலைக்கெனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

ரூபா 10/= இக்கக் கந்தோரில் கட்டிப் பெற்றுக் கொள்ளப்படும் பத்திரத்தில் மாத்திரம் கேள்விப் பத்திரம் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் வெட்டி எழுதப்படும் இடங்களில் கேள்விக்காரன் தன் ஒப்பம் இடப்பட வேண்டும். அக்கிராசனரால் கேள்விப்பத்திரம் ஏற்கப்பட்டிருக்கென்பதை அறிவித்த இரண்டு கிழமைக்குள் ஒப்பந்தப்பத்திரம் எழுதாவிடில் கட்டிய பணம் இழக்க நேரிடும்.

### வேலை விபரம்

1. உடுவில் பெரியமதவடி ஒழுங்கையில் பாலம் கட்டல்
2. தலுயினியா தோட்டம் ஒழுங்கை திருத்தல்
3. உடுவில் வண்ணான் குளம் கிணறுவெட்டிக கட்டல
4. சுன்னாகம் சுடலைக் கிணறு வெட்டிக் கட்டல்,

சி. மாணிக்கம்

Chairman,
Village Committee,
Uduvil.
9—4—52.
M. 9 11—4—5?,

## அக ஒழுக்க இலக்கண அமைதி

பொன். த. நாவேந்தன் வரைவது.

பண்டைத்தமிழ்ப் பெண்கள் செயல்வீரம் வாய்ந்தவர்களாக மட்டுமல்ல சொல்வீரம்வாய்ந்தவர்களாகவும் விளங்கினார்கள் என்பதற்குப் பழந்தமிழ் இலக்கியங்களிலே பல சான்றுகள் உண்டு. தமது இலட்சியத்தை அடைவதற்காக அவர்கள் சிறந்த சாகசக்காரிகளாகவும் சொற்றிறனுடையவர்களாகவும் விளங்கினார்களென்றால் நமக்கு இப்பொழுது அது வியப்பாகத்தானிருக்கிறது. பழந்தமிழ் நூலான ஐந்திணை ஐம்பதிலுள்ளவோர் செய்யுள் அவ்வுண்மையை எமக்கு விளங்கவைக்கின்றது!

### இன்பத்தின் பண்பு

ஒருவித ஆச்சரியம்! துன்பம் அதிகம் ஆக அது வெளிமுகம் நோக்கி விரைகின்றது. இன்பம் மிகுதியாக அதுவோ உள்முகம் நோக்கி ஓடுகின்றது. வெளியே அலைகிறபோது எல்லோருமே துன்பம் அடைகிறார்கள். ஆனால் இன்பம் விரும்புகிறபோது எல்லோரும் பூரிப்பினால் உள்ளே செல்கிறார்கள். ஆதலால் புறத்தில் புலப்படாமல் உள்ளனவாய் நிகழ்தலே இன்பத்தின் பண்பென்று இதனால் தெரிகின்றது! இவ்வுண்மைகளை நமது முன்னோர் வெகு காலத்திற்கு முன்பே நன்கு தெரிந்துகொண்டிருந்திருக்கிறார்கள். அதனைக் 'களவு' என்னுஞ் சொல்லால், வெளியில் தெரியாமல் நிகழ்வது என்னும் இயல்பினை மெல்லத் தெரிய வைத்திருக்கிறார்கள். உள்ளவாய் 'நிகழும் உண்மையை 'அகம்' என்னுஞ் சொல்லால் அழகுபடுத்தி அங்ஙனமே நம்மை உணர வைத்திருக்கின்றனர். அகத்துக்கு அகமாய் மற்றவர் அறியாத மறைவு நிலையால் நிகழ்வதே இன்பவுணர்வின் பண்பாயிருத்தலால், உண்மையில் இன்பம் நுகர்வோரெனப்படுவோர் பிறரால் அறிந்துகொள்ள முடியாத அகஒழுக்க நிலையிலிருக்கின்றனரென்பதே இயல்பாயிருக்கின்றது. இதனால் களவொழுக்கம் என்னும் பெயர் எவ்வளவு ஆழ்ந்த கருத்தை அறிவுறுத்துவதாயிருக்கின்றது?

"கணவன் பிரிந்து சென்ற நறுமணம் நல்கும் குளிர்ந்த பூக்களையுடைய சோலையைப் பார்த்து, பிரிவாற்றாமையால் என் மையுண்ட கண்கள் சிவக்கும்படியாக அழுதேன். ஒளியிக்க என் வதனத்தைப் பார்த்து என் அன்னை 'வருத்தம் யாது?' என்று கேட்கலாள், கடல் அலைகள் வந்து என் மணல் விளையாட்டை 'மண்ணாக்கி'னவே என்றேன்." என்று ஒருத்தி சொல்லும்போது அவள் பேச்சில் எவ்வளவு 'களவு' நிறைந்திருக்கிறது? பிறரறியக்கூடாத அக ஒழுக்கத்தை அவள் தன் தாயினிடமிருந்து எவ்வளவு சாமர்த்தியமாகக் காப்பாற்றியிருக்கிறாள்!

வெளியுலகம் அறியாதபடி விளைவதே காதல் இன்பத்தின் இயல்பானால் அதற்கு அவள் பொறுப்பாளியா?

"கொண்கன் பிரிந்த குளிர்ப்பூம்
பொழில் நோக்கி
உண்கண் சிவப்ப அழுதேன்;
ஒளிமுகம்
கண்டு அன்னை 'எவ்வம் யாது'
என்னக் கடல் — வந்து என
வண்டல்சிதைத்ததுஎன்றேன்."
—ஐந்திணைஐம்பது, சச.

எவ்வளவு எளிமையுடன் இக்கவிதை பண்டைத் தமிழர் காதல் வாழ்க்கையை — அக ஒழுக்கத்தைச் சித்தரிக்கின்றது. இதன் சுவையையும், உண்மையையும் உணராமல் நந்தமிழ் மக்களிற் பலர் வீண் காலம் கழித்தல் எத்தகைய வெட்கக்கரமான விடயமாகும்? பண்டைத்தமிழ் இலக்கிய நூல்களின் பண்புணர்ந்து அவற்றின் இலக்கிய இன்பத்திலே திளைத்து, பழந்தமிழர் கண்ட நாகரிக வாழ்க்கையை [illegible] நாட்டுதல் இன் [illegible] ழினத்தின் தலையாய கடனல்லவா? வாழ்க தமிழ்!

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது. — எங்கள் சோதிடம்

இவ்வாரப் பலன்கள் 13—4—52——19—4—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

முதலாம் இரண்டாம் நாட்கள் தவிர இந்தவாரம் பொதுவாக நல்லாயிருக்கும். அதிக சமூக சித்தியும் சந்தோஷமும் உண்டாகும், ஆனால் கையிலிருந்து பணம் தண்ணீர்போலப் பாய்ந்து செல்லும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

சொந்தக் காரியங்களுக்கு வாரத்தின் முற்பகுதியிலுள்ள இரண்டு நாட்களும் நல்லாயிருக்கும். செவ்வாயும், புதனும் வியாழன் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வாரத்தின் மிகுதி திருப்தவும் நன்மையாயிருக்கும். ஆனால் சிறு உத்தியோகத் தொந்தரவுகளைப்பற்றிக் கவனமாயிருக்கவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

நல்ல காலத்துடன் புதுவருடந் தொடங்குகின்றது. நண்பர் அதிக உதவி செய்வர். சமூக சித்தியும் அதிகமுண்டாம். ஆனால் வியாழனும் வெள்ளியும் சனி காலையும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

[illegible] யாய் வேலைசெய்யவேண்டி யிருந்த போதிலும் சித்தியெய்துவது நிச்சயம் போட்டியிடுவோரை வெல்வது நிச்சயம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1ம் பாதம்.

சந்தோஷமானதும் முன்னேற்றமுள்ளதுமான காலமாயிருக்கும். நல்ல மனச்சமாதானமு முண்டாகும்.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் சில மனத் தடுமாற்றங்களை மனையாள் ஆக்கக்கூடும். விசேஷ மாற்றம் ஒன்றுஞ் செய்ய வேண்டாம். செலவு அதிகரிக்கும். சிறிது காலத்துக்குத் தேசசுகமும் தொந்தரவு கொடுக்கும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இன்பம் அனுபவிக்கக்கூடிய வாரமாயிருக்கும். பணம் உழைப்பதற்கு நல்ல தருணம் வரும். பகைவர் அழிவர். சிறு பிரயாணம் நல்ல லாபத்தைத் தருவதாகும்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.

இந்த வாரம் கோபத்தை அடக்க முயலாவிட்டால் நூதனமான சிக்கல்கள் கஷ்டங்கள் ஏற்படும். புதுத் தொடர்புகள் செலவை உண்டாக்கும். வார இறுதியில் சொந்தக் காரிய சித்தியுண்டாகும்,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் பணமும் சித்தியும் முன்னுக்கே இருக்கின்றன. குடும்ப காரியங்களுக்கும் நல்ல காலம். வாகனங்களால நிலங்களால் இலாபம் நிச்சயம். புதுத் திட்டங்களுடன் முன்னேறுக.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம் திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் சமூகவாழ்வு அதிக முக்கியத்துவம் பெறும். பெண்ணின நண்பரும், இனத்தவர்களும் பல நன்மைகள் செய்வார்கள் இன்பம் அநுபவிக்கப் பல வசதிகள் ஏற்படும.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம.

இந்தவாரம் என்னதானும் சித்தி பெறவேண்டுமென்றால் நண்பர்களுடைய விருப்பங்களுக்கு இடங்கொடுக்க வேண்டும். குடும்பத் தொந்தரவுகள் உண்டாகக் கூடும். ஆனால் அவற்றைப் பொருட்படுத்த வேண்டாம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்தவாரம் புது முயற்சிகளுடன் முன்னேறமுண்டாம். சட்ட சம்பந்தமான காரியங்களால் பணம் உழைக்கக் கூடியதாய் வரும். பகைவர் அழிவர்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பிறப்பு உண்டேல் உன்னை மறவாமை வேண்டிய அம்மை

1-ம் பக்கத்தொடர்ச்சி

மாங்கனி மறைந்தது! பரமதத்தன் மனந் தடுமாறி அம்மையாரைத் தேவமாதென நினைத்து அவரை விட்டு நீங்க நினைத்தான்

அப்படியே மரக்கலஞ் செய்வித்துத் தேவையான பொருட்களுடன் வேறூருக்குச் சென்று வியாபாரஞ் செய்து பின் பாண்டிநாட்டை யடைந்து அங்கே பெரும் பொருளீட்டி அங்குள்ள ஒரு வணிகனது மகளை விவாகஞ் செய்து ஓர் பெண் மகவைப் பெற்று அம் மகவுக்குப் புனிதவதியார் என்னும் பெயரையிட்டு இன்புற்று வாழ்ந்தான்.

இச் செய்தியை யறிந்த இவனுடைய இனத்தவர் புனிதவதியாரை இவனிடம் கொண்டுசென்றார்கள். இதையறிந்த பரமதத்தன் தன் மனைவி மகவுடன் அம்மையாரை யடைந்து அடிகளில் வீழ்ந்து வணங்கினன். சுற்றத்தவர் கோபங்கொண்டு இவனைக் கடிந்தனர். இவர் மனிட மாது அல்ல இவர் ஓர் தெய்வமாது. இதனை அறிந்தே நான் இவரை விட்டு நீங்கி வேறு மணஞ் செய்து என் மகவுக்கு இவரது பெயரையும் இட்டேன், நீங்களும் வணங்குங்கள் என்றான்.

### பேய் வடிவம் பெற்றமை

இவனது தன்மையைக் கண்ட அம்மையார், பரமசிவனது திருவடியை வணங்கி அவருடைய திருவடிகளை இடையறாது வணங்கி நின்றற்குரிய பேய்வடிவைத் தமக்குத் தரும்படி வேண்டினார். உடனே வானுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் வணங்கும் பேய்வடிவத்தைப் பெற்றார்.

"ஈங்கிவன் குறித்த கொள்கை
இது; இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்
பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி(வு) அடியேனுக்குப்
பாங்குற வேண்டும்" என்று
பரமர்தாள் பரவி நின்றார்.

"ஆன அப் பொழுது மன்றுள்
ஆடுவார் அருளி னாலே
மேனெறி உணர்வுகூர வேண்டிற்றே
பெறுவார் மெய்யில்
ஊனடை வனப்பை எல்லாம்
உதறிஎய் புடம்பே யாக
வானமும் மண்ணும் எல்லாம்
வணங்குபேய் வடிவம் ஆனார்"

### இறவாத இன்ப அன்பு வேண்டல்

இவ் வடிவத்துடன் "பொற்புடைச் செய்ய பாத புண்டரீகங்கள் போற்றும் - நற்கணத்தினின் ஒன்றானேன் நான்" என்று அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையும் பாடிக் கைலைமலையை அடைந்து பரமசிவனை வழிபட விரும்பி, அம்மலையின் பக்கத்தை யணைந்தவுடன் அங்கே காலால் நடத்தல் முறையன்றெனத் தலையால் நடந்து சென்றார். அதைக் கண்ட உமையம்மையார் இஃதென்னே என வினவ இவ்வருவை இவ்வம்மை வேண்டிப் பெற்றனர் என்று விளக்கி அம்மையாரை "அம்மையே" என்றழைத்தருளினார். அம்மையார் "அப்பா" என்று அடியிணை பணிந்து வீழ்ந்து எழுந்து நின்றார். கருணாமூர்த்தி தம்பால் வேண்டுவதென்னென்று வினவ, இறவாத இன்பந்தரும் அன்பு வேண்டும், பிறவாமை வேண்டும் இன்னும், தேவரீர் திருநடஞ் செய்யத் தேவரீருடைய திருவடியின் கீழிருந்து நான் மகிழ்ந்து பாட வேண்டும் என்றார்.

இறைவர்த இன்ப அன்பு
வேண்டிப்பின்வேண்டுகின்றார்,
பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
என்றும், மறவாமை வேண்டும்;
இன்னு வேண்டுநான்
மகிழ்ந்து பாடி, அறவா!நீ
ஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க" என்றார்.

அவ்வாறு திருவாலங்காட்டிலே உடுமாறருள் செய்தார். அம்மையார் அங்கு சென்று "கொங்கை திரங்கி" என்றெடுத்து மூத்த பதிகம் முதலிய பதிகங்கள் பாடி அரனடிக்கீழ் என்றுங் குன்றாத இன்ப வாழ்வைப் பெற்றார்.

சிவ பரம்பொருளின் திருவடிகள்மீது வளரும் அன்பும் சிவனடியார் திருத்தொண்டிற் குன்றாத இன்பும் உடையராயிருந்து இல்வாழ்க்கையும் இனிது நடத்திய சிறப்பு இங்கே உற்றுநோக்கத் தக்கது.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

கந்தனஹு சித்திரைமீ அஉ (20-4-52) ஞாயிற்றுக்கிழமை திருவருளை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் அச் சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் திருநாவுக்கரசுநாயனார் குருபூசை கீழே காணப்படும் கிரமப்படி நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

பகல் 10 மணி — 2 மணி — கடவுளாராதனை.

நால்வர் பூசை, திருநாவுக்கரசு நாயனார் சரித்திரம் படித்தல், நாயனார் தேவாரம் ஓதுதல், மாகேசுர பூசை,

இரவு 7 மணி — 9 வரை,
'திருநாவுக்கரசு நாயனார்' என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம்,
1. தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐயர்,
2. ஸ்ரீ பொ. அப்புக்குட்டி.
சைவாபிமானிகள் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
10—4—52.
M 6 11—4—52.

## அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில் வசிப்பவருக்கு, மாம்பலகை விலைக்கு எடுக்க விரும்பினால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

R. B. RANDENIYA,
Kiribathkumbura,
Peradeniya.
M. 5 8, 11—4—52

## காரைநகரில் பெற்றோர் ஆசிரியர் தினம்

கடந்த வியாழக்கிழமை (3-4-52) இரவு 6-30 மணியளவில் காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத் திருநாவுக்கரசு நாயனார் மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் வடமாகாணப் பகுதி வித்தியாதரிசி திரு. அ. சரவணமுத்து அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் யாழ்ப்பாணத்தில் தமிழ் விருத்தியடைவதற்கு, ஓர் பல்கலைக்கழகம் அத்தியாவசியம் சிறுவப்படுதல் வேண்டும் என்பது பற்றியும், தமிழ் நாடுகளில் சிங்களமும், சிங்கள நாடுகளில் தமிழும் கட்டாய பாடமாக ஒழுங்கு செய்யப்பெறுதல் வேண்டும் என்பது பற்றியும் வற்புறுத்திப் பேசினார்.

திரு. ஆ. தியாகராசா M A M. Litt. அவர்கள் ஆசிரியர் கல்வி முறைகளைப் பெற்றோருக்கு, விளக்கி அவர்களது உதவியுடன் பிள்ளைகளை வளர்ச்சியடையச் செய்வது பெருநன்மை பயப்பதற்குரியதாகுமெனவும், பிள்ளைகளின் கல்வாழ்விற் பெற்றோர் முன்மாதிரியான சேவியம் நடத்தி வருதல் அத்தியாவசியகம் என்பதையும் இனிது எடுத்துரைத்தனர்.

கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் அவர்கள் பிள்ளை திடகாத்திரமுடையவர்களாய்க் கல்வியில் விருத்தியடைவதற்கு மத்தியான போசனம் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பது பற்றியும், பெற்றோர் சென்ற நான்கு வருடங்களாக நெல் வேளாண்மை இல்லாமற் போனதால் திருப்திகரமான போசனங்கொடுக்க இயலாதவர்களாய் மனவருத்தமுடையவர்களாய் இருக்கிறார்கள் என்பதுபற்றியும், ஆசிரியர் திரு. க. கனகசபை அவர்கள் காரைநகரில் கல்வி திருப்திகரமான முன்னேற்றமடையவில்லையாதலின் அரசாங்கத்தார் சகல வசதிகளுடன் ஓர் கல்விச்சாலை விசேஷமாகப் பெண்மணிகளுக்கு அமைத்துத் தருதல் வேண்டும் என்பதாக அரசாங்கத்திடம் கேட்கவேண்டுமெனப்பரிந்துரைத்தனர்.

அகில இலங்கைச் சைவ இளைஞர் சங்கக் காரியதரிசி அவர்கள் சைவ இளைஞர்கள் சமய சாதனையில் வளர்ச்சியடைய வேண்டிய அத்தியாவசியக மென்பது பற்றியும், கடவுளை அறிந்து முத்தி இன்பம் பெறுதலே வாழ்க்கையின் இலட்சியமாக ஒவ்வொருவரும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டுமெனவும் பரிந்து கேட்டுக் கொண்டார்கள்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் சூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பேலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.



கற்றோர்க்கழகு கசடற மொழிதல்

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ருணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
[illegible]
Std. 2 [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday. Aprill 11. 1952,